தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

அடையாறு சீரமைப்புத் திட்டம்.

*638 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அடையாறு சீரமைப்புத் திட்டம் அரசின் ஆலோசனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மதிப்பீடு எவ்வளவு என்றும், எப்போது துவங்கப்படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டு இருக்கின்றன. ஒன்று, நம்பியார் குழு, மற்றொன்று, சிவலிங்கம் குழு. நம்பியார் குழுவின் சிபாரிசின்படி கரை அமைக்கும் பணி ரூ. 3·07 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சிவலிங்கம் குழுவின் அறிக்கை அரசின் ஆலோசனையில் உள்ளது.

வடவாறு விரிவாக்கக் கால்வாய்.

*639 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில், மன்னார்குடி தாலுக்காவில் 43 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெற காரணமாக உள்ள வடவாறு விரிவாக்கக் கால்வாயை கல்லணையில் இணைக்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.